# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075287

C

1. District மாவட்டம் : Pudukkottai PS காவல்நிலையம் : V 2 AC Year ஆண்டு : 2024 FIR No முதஅ எண் : 01 Date நாள் : 15-06-2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 17-03-2023 Date to நாள் வரை :

Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04-10-2023 Time நேரம் :

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Through the Preliminary Enquiry

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், திசையும் 45 km West

Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி :

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. Imayovaramban (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. Ganesan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1971 (d) Nationality நாட்டினம் : Indian (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Supdt. of Police (g) Address : முகவரி V 2 AC Pudukkottai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. G. Rajendran Age 55/2024, S/o. Ganesan, Inspector of Police, T. Palur Police Station, Ariyalur District. (Formerly Inspector of Police, Viralimalai Police Station, Pudukkottai)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Due to Preliminary Enquiry was conducted.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J. Jawahar Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15/6/24
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. Imayavaramban
Rank: நிலை Dy. Supdt. of Police, V & AC, Pudukkottai No. எண் ........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC Cr.No.01/2024.**

| குற்றச்சாட்டு அலுவலர்கள் | |
| --- | --- |
| திரு.ராஜேந்திரன்,வயது 55/2024, காவல் ஆய்வாளர், த.பழூர் காவல் நிலையம், அரியலூர் மாவட்டம். முன்னாள் காவல் ஆய்வாளர், விராலிமலை காவல் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம். | புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு துவக்கக்கட்ட விசாரணை எண். PE 83/2023/POL/PKன்படி முன்னாள் காவல் ஆய்வாளர், விராலிமலை காவல் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம் தற்போது அரியலூர் மாவட்டம், த.பழூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் எதிரி–1 திரு.க.ராஜேந்திரன் என்பவர் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராகப் பணியில் சேர்ந்து, காவல் ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்று, கடந்த 24.05.2022ஆம் தேதி முதல் 26.04.2023 வரை விராலிமலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணியாற்றி, தற்போது அரியலூர் மாவட்டம், த.பழூர் காவல் நிலையத்தில் கடந்த 19.04.2023 முதல் காவல் ஆய்வாளராகப் பணியாற்றி வருகிறார்.<br>இவர் 2 (c) ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு–1988, (as amended 2018)ன் படி ஒரு பொது ஊழியர் ஆவார். |

செங்கல்பட்டு மாவட்டம், ஊரப்பாக்கத்தைச் சேர்ந்த திரு.ராஜ்குமார் என்பவருடைய தந்தையார் திரு.சுந்தரம் என்பவருக்கு புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தாலுகா, பொருவாய கிராமத்தில் இருந்த 28.90 ஏக்கர் நிலத்தில் 11.00 ஏக்கர் நிலத்தை திருச்சி உறையூரைச் சேர்ந்த எலும்பு முறிவு மருத்துவர் திரு.நரசிம்மராவ் என்பவரிடம் ஒரு ஏக்கர் 8 லட்சம் வீதம் 2022 ஆம் ஆண்டு விற்பனை செய்துள்ளார். மீதமுள்ள 17.90 ஏக்கர் நிலத்தை விற்பனை செய்வது என்று முடிவெடுத்து கடந்த 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கரூர் வாழ்வார்மங்களத்தை சேர்ந்த திரு.பிச்சை என்பவரிடம் அந்த நிலத்தை விற்பனை செய்து தரும்படி கேட்டதை தொடர்ந்து பிச்சை ராஜ்குமாரிடம் முன்பணமாக ரூ.1,00,000/– கொடுத்துள்ளார். ஆனால் பிச்சை கூறியபடி நிலத்தை விற்பனை செய்ய முடியவில்லை. அதனால் பிச்சை கொடுத்த ரூ.1,00,000/–ஐ அவரிடம் திருப்பி கொடுக்க ராஜ்குமார் இரண்டு முறை வாழ்வார்மங்களத்திற்கு சென்றும், பிச்சை அப்பணத்தை பெற்றுக்கொள்ள மறுத்துள்ளார்.

பின்னர் ராஜ்குமார் நிலத்தை விற்பனை செய்வது பற்றி வேறு சில ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் நபர்களிடம் கூறியுள்ளார். அப்போது திருச்சியை சேர்ந்த திரு.பால்ராஜ் என்பவர் ஏக்கர் ரூ.11,00,000/–க்கு விற்பனை செய்ய உரிய ஏற்பாடு செய்து தருவதாக கூறி ராஜ்குமாரிடம் ரூ.1,00,000/–ஐ முன்பணமாக கொடுத்துள்ளார். அதன்பிறகு பால்ராஜ் ராஜ்குமார் நிலத்தை விற்பனை செய்வதை அறிந்து, கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விராலிமலை காவல் நிலையத்தில் பிச்சை அது தொடர்பாக புகார் ஒன்றை கொடுத்துள்ளார். அது தொடர்பாக ராஜ்குமாரை கடந்த 14.12.2022ஆம் தேதி அன்று விராலிமலை காவல் ஆய்வாளர்

திரு.ராஜேந்திரன் என்பவர் அழைத்து விசாரணை செய்துள்ளார். அப்போது ராஜ்குமார் பிச்சை என்பவரிடம் வாங்கிய முன்பணம் ரூ.1,00,000/—ஐ உடனே கொடுக்க தயாராக இருந்த போதும் பிச்சை வாங்க மறுத்துள்ளார்.

மேலும் நிலத்தை விற்பனை செய்ய பிச்சை மேலும் ஒரு மாதம் கால அவகாசம் கேட்டுள்ளார். அதற்கு காவல் ஆய்வாளர் மேலும் ஒரு மாத காலம் அவகாசம் தருவதாகவும், ஒரு ஏக்கர் நிலத்தை ரூ.11,50,000/— விற்பனை செய்ய வேண்டும் என்றும், அதில் ரூ.5,00,000/—ம் காவல் ஆய்வாளருக்கு தர வேண்டுமென்று ராஜ்குமாரிடம் கூறி CSR No.594/2022ன் படி புகார் மனு மீதான விசாரணையை முடித்து வைத்துள்ளார்.

நிலம் விற்பது தொடர்பாக பால்ராஜ் அவரது உறவினர் கார்த்திகேயராஜா என்பவரின் வங்கி கணக்கு மூலம் மேலும் ரூ.4,00,000/—ம், மற்றும் ரூ.1,00,000/—ஐ ராஜ்குமார் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார். மேலும் பால்ராஜ் மற்றும் கார்த்திகேயராஜா ஆகியோர் சென்னை சென்று ராஜ்குமாரிடம் ரூ.3,00,000/—ஐ நேரிலும் கொடுத்துள்ளார்கள். நிலம் விற்பது தொடர்பாக மொத்தம் ரூ.9,00,000/—ஐ பால்ராஜ் ராஜ்குமாருக்கு கொடுத்துள்ளார். ஆனால் அவரால குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த நிலத்தை விற்பனை செய்ய இயலவில்லை.

இந்நிலையில் ஏற்கனவே அறிமுகமான பிச்சை ராஜ்குமாரை தொடர்பு கொண்டு நிலத்தை வாங்குவதற்கு ஒரு தகுந்த நபரை ஏற்பாடு செய்துவிட்டதாகவும், ஒரே தவணையாக பணத்தை கொடுத்து உடனடி பத்திரப்பதிவிற்கு தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். அதன்பிறகு ராஜ்குமார் அவரது தந்தை மற்றும் தம்பி துரை சக்கரவர்த்தி ஆகியோர் கடந்த 17.03.2023ஆம் தேதி காலை 09.30 மணியளவில் விராலிமலை சார்பதிவாளர் அலுவலகம் சென்று கிருஷ்ணகிரியை சேர்ந்த அர்ச்சுனன் என்பவருக்கு திரு.சுந்தரம் என்பவரின் பெயரில் உள்ள 17.90 ஏக்கர் நிலத்தை ஒரு ஏக்கர் ரூ.10,50,000/— வீதம் பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளார் என்பதும், நிலம் விற்பனை செய்து தொடர்பாக பிச்சைக்கு ஏற்கனவே ரூ.1,00,000/— வாங்கியது உட்பட கமிஷனுடன் ரூ.6,00,000/— ராஜ்குமார் கொடுத்துள்ளார். கடந்த 17.03.2023 அன்று பத்திரப்பதிவு செய்து கொடுத்த பிறகு விராலிமலை பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு மாரிமுத்து, ரவி, பூசாரி மற்றும் கருப்பையா ஆகிய தரகர்கள் வந்து ராஜ்குமாரிடம் விராலிமலை காவல் ஆய்வாளர் ராஜேந்திரன் அழைப்பதாக கூறியுள்ளார்கள். ராஜ்குமார் பத்திரப்பதிவு [illegible] முடிந்ததும், அவரது தந்தை, தம்பி துரை சக்கரவர்த்தி ஆகியோரை மதுரைக்கு அனுப்பிவிட்டு, பூசாரி என்ற தரகரின் இரு சக்கர வாகனத்தில் விராலிமலை காவல் நிலையம் சென்றுள்ளார்.

புகார்தாரார் ராஜ்குமார் காவல் நிலையம் சென்றவுடன் காவல் ஆய்வாளர் என்னப்பா எங்களுக்கு தெரியாம உன் இடத்தை விற்றுவிடாலம் என்று நினைக்கிறாயா என்று கேட்டுள்ளார். அதற்கு ராஜ்குமார் இல்லீங்க சார் வாங்குவதற்கான நபர் வந்தார்கள், விற்றுவிட்டோம் என்று சொன்னவுடன், காவல் ஆய்வாளர், ராஜ்குமாரிடம் பால்ராஜிற்கு ரூ.25,00,000/—ஐ கொடுக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் அவரிடம் புகார் வாங்கி ராஜ்குமாரை சிறையில் அடைத்துவிடுவதாக மிரட்டியுள்ளார். மேலும் வெளியில் சென்றால் ஆட்கள் நிற்கிறார்கள், நீ வெளியில் போனால் ஆபத்து என்று மிரட்டியுள்ளார். அதற்கு ராஜ்குமார் தன்னை பத்திரமாக சென்னைக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டியுள்ளார், அதற்கு வழக்கு பதிவு செய்யாமல்

பத்திரமாக ராஜ்குமாரை வெளியில் அனுப்பி வைக்க வேண்டுமென்றால் ரூ.5,00,000/– தர வேண்டும் என்று காவல் ஆய்வாளர் இராஜேந்திரன் ராஜ்குமாரிடம் கேட்டுள்ளார்.

காவல் ஆய்வாளர் கேட்ட ரூ.5,00,000/– கைவசம் இல்லையென்று ராஜ்குமார் கூறியதால், குறைந்தது ரூ.2,00,000/–வது கொடுக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தியதால், ராஜ்குமார் வேறு வழியில்லாமல் அவரிடம் இருந்த ரூ.1,00,000/–ஐ காவல் ஆய்வாளரிடம் அவாது அறையில் வைத்து கொடுத்துள்ளார். மீதத்தொகை ரூ.1,00,000/–ஐ ஆய்வாளர் அவரது தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை CUB வங்கி கணக்கு எண்ணை (கணக்கு எண்.500101013159252) கொடுத்து மதுரை சென்ற ராஜ்குமாரின் தம்பி துரை சக்கரவர்த்தி மூலம் அனுப்பி வைக்க வற்புறுத்தியதன் பேரில், ராஜ்குமார் அவாது தம்பியை தொடர்பு கொண்டு ரூ.1,00,000/– அனுப்பி வைக்க கூறியுள்ளார். அதனடிப்படையில் துரை சக்கரவர்த்தி மதுரை ஒத்தக்கடையிலிருந்து அவரது வங்கி கணக்கு மூலம் மதியம் 14.46 மணியளவில் Fund Transfer மூலம் ரூ.50,000/–ம், 15.27 மணிக்கு ATM மூலம் ரூ.50,000/–ம் மொத்தம் ரூ.1,00,000/– இராஜேந்திரன் வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, எதிரி திரு.க.இராஜேந்திரன் காவல் ஆய்வாளர், விராலிமலை காவல் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம் (தற்போது த.பழூர் காவல் நிலையம், அரியலூர் மாவட்டம்) என்பவர் செங்கல்பட்டு மாவட்டம், ஊராப்பக்கத்தைச் சேர்ந்த திரு.ராஜ்குமார் என்பவரை நிலம் விற்பது தொடர்பான பிரச்சினையில் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைக்காமல் இருப்பதற்காகவும், பிரச்சினையில்லாமல் அனுப்பி வைப்பதற்காக ரூ.2,00,000/–ம் லஞ்சமாக பெற்றுள்ளது தொடர்பாக சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரகத்திற்கு அனுப்பப்பட்ட துவக்கக்கட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சென்னை இயக்குனரக குறிப்பாணை எண்.PE.83/2023/POL/PK, நாள்.10.06.2024ன்படி எதிரி மீது வழக்கு பதிவு செய்ய வழங்கப்பட்ட உத்தரவின்படி இன்று 15.06.2024 மாலை 17.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குற்ற எண்.01/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018)ன்படி என்னால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், இயக்குனரக குறிப்பாணை ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்/ தனி நீதிபதி புதுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பியும், மற்றொரு நகல் நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

15/6/24

(க.இமயவரம்பன்)
காவல் துணைக்கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
புதுக்கோட்டை